## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனி -2016

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2012 ஆகஸ்ட் 24 இல் ஒன்றிணைக்கப்பட்டது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றானதுடன் திறைசேரிச் செயலாளர் கம்பனியின் தனியான பங்குதாரராகவுள்ளார்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ)

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் பெலவத்த சீனி கம்பனியின் வடிசாலைப் பிரிவால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 760,763,929 தொகையான நிலையான சொத்துக்களிற்காக மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவன்கல தொழிற்சாலையின் வழக்கிழந்த மற்றும் பயன்படுத்த முடியாத சொத்துக்களானது தனியாக இனங்காணப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நியாயமாக அதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணங்களிற்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) செவன்கல சீனி கம்பனியின் கணக்கு புத்தகங்களில் காட்டப்பட்ட ரூபா 81,655,315 எதிர்மறைப் பெறுமதியான இருப்பு உருப்படிகளானது அத்தகைய பெறுமதி கழிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு எடுத்துவரப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்காக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 153,121,987 ஆகவிருந்தது. ஆனால், இதற்கு பதிலாக ரூபா 92,167,028 தொகை பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) செவன்கல சீனிக்கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 276,727,945 தொகையான விவசாயிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளிற்கான வயதுப் பகுப்பாய்வானது தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அறவிடமுடியாக் கடன் தொகை பதவழிப்புச் செய்யப்பட்டோ அல்லது ஐயக்கடன் ஏற்பாடு பதிவழிப்பு செய்யப்பட்டோ இருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்குச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 19,168,293 தொகை மீதியை நிரூபிப்பதற்கான சான்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) பெல்வெத்த மற்றும் செவன்ஹலவின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களிலுள்ள ஒன்றிணைந்த கணக்கு மீதிகளின் பூர்த்தியாக்கல் தன்மை மற்றும் உள்ளகத் தன்மையை சரிபார்ப்பதற்கான கணக்காய்வுச் சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 177,050,274 தொகையான வருமான வரி நடப்பு ஆண்டுக்கு போதியளவுள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கான வருமான வரி கணிப்பீடு கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 339,630,179 தொகையான 08 வருமதிக் கணக்கு விடயங்களின் நீண்டகால நிலுவையாகவுள்ள மீதிகளையும் ரூபா 423,593,599 தொகை 10 செலுத்த வேண்டிய விடயங்களின் மீதிகளையும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (i) பிரிவு 131 | 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வருடாந்த பொதுக்கூட்டம் முடிவடைந்த திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் வருடாந்த கணக்கு பூர்த்தி செய்யப்படுதல். கம்பனியின் பணிப்பாளர் மற்றும் செயலாளர் கையொப்பமிட்டு கணக்குப் பிரதியானது கம்பனிப்பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் இதனுடன் இணங்கும் வகையில் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 133 | கம்பனியின் சபையானது ஒவ்வொரு கலண்டர் வருடத்திலும் ஒவ்வொரு தடவையும் கம்பனியின் ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் 06 மாதங்கள் பிந்தாமலும் முன்னைய வருடாந்த பொதுக்கூட்டத்திற்குப் பின்னர் 15 மாதங்களிற்குப் பிந்தாமலும் பங்குதாரர்களின் வருடாந்த பொதுக்கூட்டம் கூட்டப்பட வேண்டியபோதிலும் இதன்படி கூட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 17(1) (அ) ஆம் பிரிவு | ஊழியரின் மொத்த வருவாய்களிடமிருந்து ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு செலுத்தப்பட வேண்டிய போதிலும், தலைமை அலுவலகத்தில் வேலை செய்த ஊழியர்களின் பங்களிப்பு அடிப்படை சம்பளத்திடமிருந்து மாத்திரம் செலுத்தப்பட்டது. |
| (இ) 1998 ஆம் ஆண்டின் ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவு (திருத்தப்பட்டது) | ஊழியர்களின் மொத்த வருவாய்களிடமிருந்து ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு செலுத்தப்பட வேண்டிய போதிலும், தலைமை அலுவலகத்தில் வேலை செய்த ஊழியர்களிற்கான பங்களிப்பு அடிப்படை சம்பளத்திலிருந்து செலுத்தப்பட்டது. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தி | ஆட்சேர்ப்பு திட்டத்தை ஒவ்வொரு நிறுவனம் வைத்திருக்க வேண்டிய போதிலும், ஆட்சேர்ப்பிற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டமானது பெல்வத்த மற்றும் செவன்கல தொழிற்சாலைகள் உள்ளடங்கலாக கம்பனியின் தலைடை அலுவலகத்திருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தால் ஆதரவழிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெல்வத்த சீனிக்கம்பனியானது 2016 ஆகஸ்ட் 23 இல் ரூபா 13,490,010 தொகையான கரும்பு ஏற்றும் இயந்திரமொன்றையும் மற்றும் 2016 நவம்பர் 28 இல் ரூபா 30,524,000 தொகையான 10 டிரக்டர்களை பெறுகை வழிகாட்டிகளில்

குறிப்பிடப்பட்ட பெறுகை செய்முறையை பின்பற்றாமலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமலும் கொள்வனவு செய்திருந்தது. மேலும், இதற்காக மொத்த கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது இயக்குனர் சபையினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் கம்பனியின் தலைமை அலுவலகத்திற்காக 04 செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 03 சாரதிகள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். எனினும், மீளாய்வாண்டின் போது எந்த செயற்திட்டமும் தொடங்கப்பட்டோ அல்லது அத்தகைய உத்தியோகத்தர்களால் ஒருங்கிணைக்கப்பட்டோ இருக்கவில்லையென்பதுடன் அதற்காக செலுத்தப்பட்ட படிகள் ரூபா 2,984,552 ஆகும்.

(இ) கம்பனியின் தலைமை அலுவலகத்திற்காக செயற்திட்ட முகாமையாளர் பணிப்பாளர் சபையினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் தலைவரால் ரூபா 150,000 மாதாந்த சம்பளத்திற்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தது. எந்தவொரு செயற்திட்டமும் தொடங்கப்பட்டிருக்காத போதிலும், மீளாய்வாண்டின் போது இறுதி ஐந்து மாதங்களிற்கான சம்பளமாக இந்த உத்தியோகத்தர்களிற்காக ரூபா 711,290 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார்விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 1,050,827,240 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 873,073,391 வரிக்கு முன்னரான மிகையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,923,900,631 மிகையை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை வருமானம் ரூபா 2,847,252,602 தொகையால் அதிகரித்தமை 58 சதவீத நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்த வருமானம் ரூபா 7.8 பில்லியனிலிருந்து 99 சதவீதமானது செயற்பாட்டு வருமானத்தை உள்ளடக்கியிருந்தது. ரூபா 6.8 பில்லியன் மொத்த செயற்பாட்டு செலவினத்திலிருந்து ரூபா 5.5 பில்லியன் விற்பனைக் கிரயத்தையும் உள்ளடக்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 2.17:1 மற்றும் 1.21:1 ஆகவிருந்தது. இது முன்னைய ஆண்டில் 1.82:1 மற்றும் 1.17:1 ஆகவிருந்தது. மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 1,327 மில்லியன் வைப்புத்தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த சாதக திரவ நிலமைக்கு பிரதான காரணமாகவிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப விகிதமானது 28 சதவீதமாகவிருந்ததுடன் தேறிய இலாப விகிதமானது 13.1 சதவீதமாகவிருந்தது. இது முன்னைய ஆண்டில் முறையே நேர்மறை 4 சதவீதம் மற்றும் 22 சதவீதமாகவிருந்ததுடன் கம்பனியின் விற்பனைகள் 58 சதவீதத்தால் அதிகரித்தமை இலாபத்தன்மை அதிகரித்தமைக்கான பிரதான காரணமாகவிருந்தது.

**3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்.**

மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 529,528,543 தொகையான வங்கி மேலதிகப்பற்றுக்காக ரூபா 49,837,683 வட்டி செலுத்தப்பட்டிருந்தது. இது குறுங்கால கடன்களிற்கான உயர் வட்டிக் கொடுப்பனவினால் தொழிற்படு மூலதன முகாமைத்துவமானது சாதகமான நிலைமையில்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெல்வத்த சீனிக் கம்பனி**

(i) தொடர்ச்சியாக நட்டத்தை ஏற்படுத்துகின்ற கழக வீடு மற்றும் விடுதி வீடு மேலதிக வருமானத்தை உழைப்பதற்காக புதுப்பிக்கும் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 28,163,089 செலவழிப்பதன் மூலம் தனிப்பட்ட இலாபத்தன்மைக்காக ஸ்தாபிக்கப்பட்டது. இது மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் புதுப்பித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த கழக வீடு மற்றும் விடுதிவீடு 2016 ஆம் ஆண்டு இறுதிவரை தொடர்ச்சியான நட்டங்களை உழைத்திருந்ததுடன் கம்பனியானது அதற்காக ஏற்பட்ட கிரயத்திற்கு எதிராக நன்மைகளை பெற்றிருக்கவில்லை.

(ii) ரூபா 128,910,000 கிரயத்தில் 2013 ஆம் ஆண்டில் அரச பெறுகை செய்முறை வழிகாட்டிகளை பின்பற்றாமல் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு அகற்றும் முறைமையானது தொழிற்சாலை இடங்களில் இணங்கப்பட்ட முறையில் ஸ்தாபிக்காமையால் பயன்படுத்தும் நிலையில் இருந்திருக்கவில்லை. ஆனால், மீளாய்வாண்டின் போது குத்தகை ட்டணங்கள் மற்றும் வட்டியாக ரூபா 28,509,183 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், முன்னைய 03 ஆண்டுகளுக்கான வட்டியை உள்ளடக்கி செலுத்த வேண்டிய குத்தகை கட்டணங்களை ரூபா 48,903,588 ஆகவிருந்ததுடன் இது செயற்பாடற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) செவன்ஹல சீனிக் கம்பனி**

(i) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சூழல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், சூழல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்காததுடன் சீனி உற்பத்திக்கான வடிசாலை தொழிற்சாலை மற்றும் எதனோல் பெறப்பட்டிருக்கவில்லை. ரூபா 27,067,812 கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணிப்பை பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கைத்தொழிலுக்கு தேவையான சூழல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) கம்பனியின் கொள்வானவாளருக்கு எத்தனோலை விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மதுபான பாய்ச்சல் மீற்றர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,951,019 கிரயத்தில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மீற்றரின் செயலாற்றலானது ஒழுங்கான முறையில் பரீட்சிக்காமல் இது கொள்வனவு செய்யப்பட்டது. இந்த மீற்றரானது அளவீட்டுத்த தவை கொடுத்திருக்காத போதும் இந்தப்

பிரச்சினையை தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெல்வத்த சீனிக் கம்பனி**

(i) கரும்பு பிழிதல் இயலளவு நாளொன்றுக்கு கரும்பொன்றிற்கு 600,000 மெற்றிக் தொன்களாக இருந்த போதிலும், (நாளொன்றுக்கு 3000 எம்ரீ ஒரு வருடத்திற்கு 200 நாட்கள் செயற்பாடு) 2012 ஆம் ஆண்டிலிருந்து சீனித் தொழிற்சாலையானது அதிகூடிய இயலளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டிற்காக பிழிந்த மொத்த கரும்பு 416,340 மெற்றிக்தொன்கள் ஆக இருந்த போதும், மொத்த இயலளவின் 31 சதவீதமான 183,660 மெற்றிக்தொன் தொகையான பயன்படுத்தாத இயலளவாக இருந்தது. ஆகையால், அதிகூடிய இயலளவில் செயற்படுத்துவதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(ii) கரும்பிலிருந்து பெறப்பட்ட பிரதான உற்பத்தி கரும்பு மற்றும் எதனோல் ஆகவிருந்ததுடன், உப உற்பத்திகளை உற்பத்தி செய்வதன் மூலம் கம்பனியின் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வடிசாலைக்கு தேவையான சக்தியானது கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், இது போதியளவில் இல்லாததால் சூளை எண்ணெய்யானது (Furnace Oil) தொழிற்சாலை இயந்திரங்கள் செயற்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் கம்பனியானது, ரூபா 122,496,000 செலவை ஏற்படுத்தியது. எனினும், மாற்று சக்தி மூலத்தை பயன்படுத்தி இந்தக் கிரயத்தை குறைப்பதற்கோ அல்லது உபபொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கோ அல்லது மேலதிக சக்தியை அதிகரிப்பதற்காக கொதிகலன்களை நவீனமயப்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செவன்ஹல சீனிக் கம்பனி**

(i) பெல்வத்த சீனிக் கம்பனியின் பிரகாரம், சக்தியை அதிகரிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 159,882,624 செலவீனமேற்பதுடன் இந்தக் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செவன்ஹல சீனிக் கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட எதனோலின் தரமானது மொலஸ்சஸ் இலுள்ள அதிகூடிய அழுக்குகள் மற்றும் வடிசாலை பிரிவில் போதிய வடிகட்டல்கள் நிரல்கள் இன்மையால் நியமமட்டத்தை விட குறைவாகவிருந்தது. எனவே தான், செவன்ஹல சீனிக் கம்பனியின் எதனோல் விற்பனை விலை பெலவத்த சீனிக் கம்பனியில் உற்பத்தி செய்யப்பட்ட எதனோலின் விற்பனை விலையை விட குறைவாகவிருந்தது. எனினும், செவன்ஹல சீனிக் கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட எதனோலின் தரத்தை முன்னேற்றுவதற்கு கம்பனியால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், பெலவத்த மற்றும் செவன்ஹல கம்பனிக்கு சொந்தமாக்கப்பட்டதுடன் கந்தளாய் மற்றும் கிங்குறா சீனித் தொழிற்சாலைகளானது கம்பனிக்கு சொந்தமாக்கப்படாமையால் அவை விளைவற்றிருந்ததுடன் கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றது.

(ஆ) பெலவத்த மற்றும் செவன்ஹல சீனி கம்பனிகளிற்கு சொந்தமான காணி, கட்டிடம் போன்ற நகர்வற்ற சொத்துக்கள் 2011 இன் 43 ஆம் இலக்க செயற்பாடற்ற நிறுவனங்கள் அல்லது குறைப்பயன்பாட்டு சொத்துக்களின் மீட்பு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும், ஏனைய நகரும் சொத்துக்களை கையேற்காமல் கம்பனியில் நாளுக்கு நாள் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. ஆனால் கம்பனிக்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் பட்டியல் கம்பனியில்லாதிருந்ததுடன் இரண்டு கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பெலவத்த இலங்கை வங்கி கிளைக்கு கொடுக்கப்பட்ட பெலவத்த சீனிக் கம்பனிக்கு சொந்தமான கட்டிடம் தொடர்பாக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்தக் கடிதத்தின் பயன்பாடு தொடர்பாக வாடகையை பதிவழிப்பதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் வங்கி சார்பாக கம்பனியால் மின்சார மற்றும் நீர்ப்படிகள் செலுத்தப்பட்டது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

நிரந்தர ஊழியர்களை வேலைக்கமர்த்தாமல், முகாமைத்துவ மட்டத்திலுள்ள அலுவலர்கள் குறுங்கால, ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் அந்த நியமங்கள் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது.

**5. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், வரைவு நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 23 இலேயே கம்பனியால் வழங்கப்பட்டது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

சீனித்தொழிற்காக வடிகட்டும் தொழிற்சாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கான உள்ளகக்கணக்காய்வு செவனகல சீனிக்கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.3 பெறுகைத்திட்டம்**

2006 அரச பெறுகை வழிகாட்டிகளின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டின் பிரதிகள் அடுத்துவரும் ஆண்டு தொடங்கிய பின்னர் 15 நாட்கள் பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் பிரதியை வழங்கியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கிரய மற்றும் நிதிக் கணக்கீடு | (i)சரியான கிரய மற்றும் நிதிக் கணக்கீட்டு முறைமை இல்லாமை |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடுகள் | வழக்கிழந்த இருப்புக்களை இனங்காண்பதன் மூலம் ஏற்பாடுகள் அல்லது பதிவளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் வயதுப் பகுப்பாய்வு ஊடாக அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன்களிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நீண்டகால நிலுவை மீதிகள் மற்றும் செலுத்தவேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படாதிருந்ததுடன் செவன்ஹல சீனிக்கம்பனியின் பழைய உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட ஆளணிக்கோவைகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கொள்வனவுகள் | கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |